**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.30/2025**

**நாள் : 12.02.2026**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.முருகம்மா | மாவட்டம் | : | சித்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.கண்ணாயிரம் | வயது | : | 50 |
| ஊர் | : | பெட்டவான்கா | தொழில் | : | |
| வட்டம் | : | காங்குந்தி | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில்ம் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1

2. விபத்து பதிவேடு அறிக்கை நகல் – ம.சா.ஆ.2

3. பேருந்தின் பதிவு புத்தகம் நகல் – ம.சா.ஆ.3

4. பேருந்து ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் –ம.சா.ஆ.4

5. மருத்துவ விடுப்பு சான்று அசல் – ம.சா.ஆ.5

6. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் – ம.சா.ஆ.6

7. மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் – ம.சா.ஆ.7

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

திருப்பத்தூர்–நாட்றம்பள்ளி செல்லும் சாலையில் கட்டேரியம்மன் கோவில் அருகே விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் எதிர்திசையில் வந்த அரசு பேருந்தை கவனிக்காமல் செல்போன் பேசிக்கொண்டே வந்த நிலையில் விபத்தினை தவிர்க்கவேண்டி பேருந்தின் ஓட்டுநர் சாலையின் இடதுபுறமாக திரும்பும்போது எதிரில் இருந்த புளியமரத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு தர்மபுரி அரசு மருத்துவமனையில் அட்மிட் ஆனேன். அதற்கு பின்னிட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். விபத்திற்கு முன்னர் கூலிவேலை செய்து மாதம் ரூ.20,000/– சம்பாதித்ததை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. அது முழுமையாக குணமடைந்துவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு தலையில் 30 தையல் போட்டுள்ளார்கள், வலது காலில் ராடு பொருத்தியுள்ளார்கள். நான் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள அதிகப்படியானது என்றால் சரியல்ல, நான் கோரியுள்ள இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.